ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 29.11.2016

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2016 ஓகத்து

### பொதுநோக்கு

வர்த்தகப் பற்றாக்குறை குறைவடைந்து, சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவலுப்பல்களிருந்தான உட்பாய்ச்சல்கள் ஆரோக்கியமான வீதத்தில் வளர்ச்சியடைந்த வேளையில் 2016 ஓகத்து காலப்பகுதியில் வெளிநாட்டுத்துறை மிதமான செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தது. 2016 ஓகத்து காலப்பகுதியில் ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைப் பதிவுசெய்த போதும் இறக்குமதிகள் வளர்ச்சியடைந்து வர்த்தகப்பற்றாக்குறையில் விரிவொன்றினைத் தோற்றிவித்தன. எனினும், சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவலுப்பல்களிலிருந்தான வருவாய்கள் வளர்ச்சியடைந்தமை வர்த்தகப்பற்றாக்குறையின் தாக்கத்தினை குறைவடையச்செய்தன. அதேவேளை, நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்களுக்கு அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனை என்பனவற்றிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளும் 2016இல் அரசிற்கான நீண்டகால கடன் உட்பாய்ச்சல்களும் உதவியாக விளங்கின.

### ஏற்றுமதிச் செயலாற்றம்

2016 ஓகத்தில் ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர்கள் 866 மில்லியன்களாக மதிப்பிடப்பட்டதுடன் இது 2015 ஓகத்தின் ஏற்றுமதி வருவாய்களை விட 8.4 சதவீதம் உயர்வாகக் காணப்பட்டு 2015 பெப்புருவரியின் பின்னர் முதற்தடவையாக அதிகரிப்பொன்றினைப் பிரதிபலித்தன. இவ்வதிகரிப்பிற்கு 2015 ஓகத்தின் பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதிகளின் குறைந்த மட்டமே பகுதியளவிற்கு காரணமாகும்.

தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திகள் ஏற்றுமதி வருமானத்தில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தன. தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு ஏற்றுமதிசெய்யப்பட்ட கருந்தேயிலையின் அளவு அதிகரித்தமையே காரணமாகும். எனினும், 2016 ஓகத்தில் தேயிலையின் சராசரி ஏற்றுமதியில் 2015 ஓகத்தின் அதே அளவிலேயே

காணப்பட்டது (கிலோகிறாமொன்று ஐ.அ.டொலர் 4.33). இறப்பர் உற்பத்தி ஏற்றுமதிகளின் அனைத்து துணைவகைகளிலும், குறிப்பாக அறுவைசிகிச்சை மற்றும் ஏனைய வகை கையுறைகள், இறப்பர் டயர்கள் என்பனவற்றின் மேம்பட்ட செயலாற்றம் இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பங்களித்தன. மேலும், இரும்பு மற்றும் உருக்குப் பொருட்கள், போக்குவரத்து சாதனங்கள் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை (குறிப்பாக காய்கறிகள், பழங்கள் மற்றும் உள்ளீடுகளின் தயாரிப்புக்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட புகையிலை) மற்றும் வாசனைத்திரவியங்கள் (குறிப்பாக கறுவா, சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரி) என்பனவற்றின் ஏற்றுமதிகளும் ஏற்றுமதியின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க அளவிற்கு பங்களித்தன. எனினும், 2016 ஓகத்தில் ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருமானம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.1 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. 2016 ஓகத்தில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடை ஏற்றுமதி 2015இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 9.0 சதவீதத்தினால் அதிகரித்தவிடத்து மற்றைய நாடுகளுக்கான ஆடை ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன.

ஓகத்து மாதத்தில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரிப்பு காணப்பட்ட போதும், 2016இன் முதல் எட்டுமாத காலப்பகுதிக்கான ஒன்றுசேர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 6,865 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. இது 2015இல் இதே காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வருவாய்களைவிட 4.1 சதவீதம் குறைவானதாகும். 2016இன் முதல் எட்டுமாத காலப்பகுதியில் ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருமானம் 2015இல் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 3.5 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு ஏற்றுமதிச் சாதனங்கள் பெற்றோலிய உற்பத்திகள் (குறிப்பாக நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருட்கள்) தேயிலை, வாசனைத்திரவியங்கள் (குறிப்பாக மிளகு, மற்றும் கராம்பு) இரத்தினக்கல் மற்றும் வைரங்கள் என்பனவற்றின் ஏற்றுமதி வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் எதிரீடு செய்யப்பட்டு, ஏற்றுமதி வருமானத்தில் ஏற்பட்ட மேற்குறிப்பிட்ட மொத்தக் குறைப்பிற்கு வழிவகுத்தன. முக்கிய வணிக ஏற்றுமதி நாடுகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா. ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் 53 சதவீதத்துக்கு வகைகூறின.

அட்டவணை 1: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள்

| வகை | ஓகத்து 2015 (ஐ.அ.டொ மில்) | ஓகத்து 2016 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) | சனவரி - ஓகத் 2015 (ஐ.அ.டொ மில்) | சனவரி - ஓகத் 2016 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **618.2** | **654.3** | **5.8** | **5,455.0** | **5,314.7** | **(2.6)** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 400.1 | 393.4 | (1.7) | 3,218.7 | 3,333.7 | 3.6 |
| இறப்பர் உற்பத்திகள் | 55.1 | 68.2 | 23.9 | 524.9 | 508.4 | (3.1) |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 19.4 | 28.6 | 47.9 | 197.3 | 200.2 | 1.5 |
| உணவு, குடிவகைகள் மற்றும் புகையிலை | 18.5 | 25.6 | 38.6 | 174.3 | 199.5 | 14.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 25.3 | 23.0 | (8.9) | 289.4 | 185.4 | (35.9) |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 22.3 | 20.7 | (7.2) | 227.8 | 187.3 | (17.8) |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 10.7 | 14.5 | 35.6 | 95.0 | 115.7 | 21.7 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 2.9 | 12.9 | 336.9 | 38.1 | 55.8 | 46.5 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 9.6 | 5.2 | (46.2) | 32.6 | 17.7 | (45.7) |
| ஏனையவை | 54.4 | 62.2 | 14.3 | 657.1 | 511.0 | (22.2) |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **177.8** | **208.0** | **17.0** | **1,667.8** | **1,520.6** | **(8.8)** |
| தேயிலை | 91.8 | 108.9 | 18.6 | 901.2 | 835.0 | (7.3) |
| வாசனைத்திரவியம் | 30.1 | 35.7 | 18.9 | 249.3 | 194.1 | (22.1) |
| தேங்காய் | 29.5 | 32.3 | 9.7 | 238.0 | 238.3 | 0.1 |
| கடலுணவு | 11.5 | 13.0 | 12.6 | 112.5 | 110.7 | (1.6) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள | 8.1 | 11.7 | 44.1 | 106.7 | 83.4 | (21.8) |
| இறப்பர் | 1.7 | 2.3 | 32.4 | 17.8 | 20.9 | 17.2 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.3 | 2.2 | (33.2) | 22.5 | 19.9 | (11.6) |
| ஏனையவை | 1.8 | 1.9 | 5.9 | 19.9 | 18.3 | (8.3) |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **2.9** | **4.0** | **38.0** | **32.6** | **29.9** | **(8.2)** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **798.9** | **866.3** | **8.4** | **7,155.4** | **6,865.2** | **(4.1)** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்

இலங்கை மத்திய வங்கி

**இறக்குமதிச் செயலாற்றம்**

2016 ஓகத்து காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினம் 2015 ஓகத்துடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,649 மில்லியனாக விளங்கி 8.3 சதவீத அதிகரிப்பினைக் காட்டின. இது, 2015 யூலைக்கு பின்னர் பதிவுசெய்யப்பட்ட முதலாவது ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பாகும். நுகர்வுப் பொருட்களின் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு ஊர்திகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறைப்புக் காரணமாக விளங்கியதுடன் இது இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்கள் இரண்டும் மீதான இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினால் எதிரீடு செய்யப்பட்டு இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பிற்கு வழிவகுத்தது.

இடைநிலைப் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு புடவை மற்றும் புடவைப்பொருட்கள் தங்கம் மற்றும் கனிப்பொருட்கள் என்பனவற்றின் மீதான செலவினம் முக்கிய தூண்டுதலாக அமைந்ததுடன் இவை 2016 ஓகத்தின் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முறையே 52.4 சதவீதம், 34.7 சதவீதம் மற்றும் 14.4 சதவீதத்தினால் பங்களித்தன. 2016 ஓகத்தில் மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி என்பனவற்றை உள்ளடக்கிய எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 3.2 சதவீதம் குறைவாக இருந்தமைக்கு மசகெண்ணெய் மீதான இறக்குமதிச் செலவினம் 13.3 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 69 மில்லியனுக்கு மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். மசகெண்ணெய் இறக்குமதியினது அளவு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.0 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் விலை 14.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. 2016 ஓகத்தில் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 18.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பெரும்பாலும் அனைத்து துணைவகைகளிலும் ஏற்பட்ட மிக உயர்ந்த இறக்குமதியின் காரணமாக பொறிகள் மற்றும் கருவிகளின் மீதான செலவினம் 35.9 சதவீதத்தினால் அதிகரித்தமையே காரணமாகும். கட்டடப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 18.2 சதவீதத்தினால் உயர்வடைந்து பொருளாதாரத்தில் கட்டுமான நடவடிக்கைகள் அதிகரித்தமையினைப் பிரதிபலித்தது. போக்குவரத்து சாதனங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 17.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு முச்சில்லு வண்டிகள் மற்றும் பேருந்துகள் மீதான இறக்குமதிச் செலவினம் குறைவடைந்தமையே காரணமாகும். எனினும், நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 6.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு 2015 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2016 ஓகத்தில் தனியாள் ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட 53.7 சதவீதமம் கொண்ட வீழ்ச்சி முக்கிய காரணமாக விளங்கியதுடன் இதற்கு இறக்குமதிவரிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு தனியாள் உந்துஊர்திகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சியை ஏற்படுத்த வழி வகுத்தமையே காரணமாகியது. 2016 ஓகத்தில் மற்றைய அனைத்து உணவல்லா நுகர்வுப்பொருட்களின் மீதுமான இறக்குமதிச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தன. அதேவேளை, உணவு மற்றும் குடிபானங்கள் தொடர்பான இறக்குமதிச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 17.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் சீனி, குடிபானங்கள், வாசனைத்திரவியங்கள் என்பன மீதான செலவினம் முறையே 80.9 சதவீதத்தினாலும் 140.3 சதவீதத்தினாலும் 73.3 சதவீதத்தினாலும் அதிகரித்தன. சீனி மீதான உயர்ந்த செலவிற்கு உயர்ந்த விலைகளும் உயர்ந்த அளவும் தூண்டுதலாக விளங்கின.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2016இன் முதல் எட்டுமாத காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 12,403 மில்லியனை அடைந்தது. இது 2015இன் முதல் எட்டுமாத காலப்பகுதியில் இறுதியில் அடையப்பட்ட மட்டத்திலிருந்து 1.6 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகும். இதற்கு தனியார் ஊர்திகள், எரிபொருள், வர்த்தக ரீதியான போக்குவரத்துச் சாதனங்கள், தானியங்கள் மற்றும் அரைக்கும் ஆலை கைத்தொழிலுக்கான உற்பத்திகளின் இறக்குமதி முக்கிய காரணமாக விளங்கியது. எனினும், 2016இன் முதல் எட்டுமாத காலப்பகுதியில் எரிபொருள்அல்லா இறக்குமதிகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியினை விட 1.2 சதவீதம் உயர்வாகக் காணப்பட்டது. சீனா, இந்தியா, யப்பான், சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என்பவற்றிலிருந்தான இறக்குமதிகள் மொத்த இறக்குமதிகளில் 57.2 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 2 - இறக்குமதிகள் மீதான செலவினம்**

| வகை | ஓகத்து 2015 (ஐ.அ.டொ மில்) | ஓகத்து 2016 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) | சனவரி - ஓகத் 2015 (ஐ.அ.டொ மில்) | சனவரி - ஓகத் 2016 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **420.3** | **393.7** | **(6.3)** | **3,142.4** | **2,824.9** | **(10.1)** |
| உணவு மற்றும் குடிபானங்ககள் | 121.1 | 142.6 | 17.8 | 1,124.4 | 1,039.1 | (7.6) |
| சீனி மற்றும் இனிப்புப் பொருட்கள் | 22.0 | 39.7 | 80.3 | 186.9 | 195.9 | 4.8 |
| பால் உற்பத்திகள் | 23.8 | 18.1 | (24.1) | 169.6 | 157.1 | (7.4) |
| குடிபானங்ககள் | 5.7 | 13.7 | 140.3 | 49.6 | 63.1 | 27.4 |
| வாசனைத்திரவியம் | 7.9 | 13.6 | 73.3 | 72.3 | 90.4 | 25.0 |
| எண்ணெய் மற்றும் கொழுப்பு | 2.4 | 2.9 | 20.9 | 23.6 | 23.8 | 0.5 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 59.2 | 54.5 | (8.0) | 622.4 | 508.9 | (18.2) |
| உணவல்லாத நுகர்வுப் பொருட்கள் | 299.2 | 251.1 | (16.1) | 2,018.0 | 1,785.8 | (11.5) |
| வாகனங்கள் | 160.3 | 74.1 | (53.7) | 904.6 | 547.1 | (39.5) |
| மருந்து மற்றும் மருந்தாங்கற் பொருட்கள் | 36.9 | 44.5 | 20.7 | 304.7 | 354.2 | 16.2 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 102.1 | 132.5 | 29.8 | 808.7 | 884.5 | 9.4 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **738.7** | **824.0** | **11.5** | **6,442.7** | **6,309.0** | **(2.1)** |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 154.2 | 220.0 | 42.7 | 1,547.4 | 1,764.7 | 14.0 |
| எரிபொருள் | 186.5 | 180.6 | (3.2) | 1,834.7 | 1,500.8 | (18.2) |
| இரசாயனப் பொருட்கள் | 84.0 | 66.5 | (20.8) | 585.8 | 568.1 | (3.0) |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 3.9 | 53.8 | 1,274.4 | 131.3 | 299.3 | 128.0 |
| அடிப்படை உலோகம் | 48.0 | 34.3 | (28.6) | 325.9 | 249.5 | (23.4) |


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கனிம உற்பத்திகள் | 10.5 | 28.5 | 172.6 | 136.5 | 156.7 | 14.8 |
| கோதுமை மற்றும் சோளம் | 14.1 | 23.1 | 63.9 | 214.0 | 164.5 | (23.2) |
| ஏனையவை | 237.6 | 217.1 | (8.6) | 1,667.1 | 1,605.5 | (3.7) |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **363.8** | **429.7** | **18.1** | **3,007.4** | **3,259.6** | **8.4** |
| பொறி மற்றும் கருவிகள் | 161.1 | 218.9 | 35.9 | 1,482.9 | 1,815.4 | 22.4 |
| கட்டடப் பொருட்கள் | 121.9 | 144.1 | 18.2 | 845.1 | 1,025.7 | 21.4 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 80.5 | 66.3 | (17.6) | 676.3 | 414.3 | (38.7) |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.3 | 0.3 | 3.0 | 3.0 | 4.1 | 36.8 |
| **4. வகைப்படுத்தப்படாதவை** | **0.5** | **1.7** | **214.0** | **11.5** | **9.4** | **(18.2)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,523.4** | **1,649.1** | **8.3** | **12,604.0** | **12,402.9** | **(1.6)** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கை மத்திய வங்கி

**வர்த்தக மீதி**

2015 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2016 ஓகத்தில் ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்த போதும் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட உயர்ந்த அதிகரிப்பின் விளைவாக 2016 ஓகத்தில் வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 783 மில்லியனுக்கு அதிகரித்தது, 2016 ஓகத்து இறுதியில் ஒன்றுசேர்ந்த வர்த்தகப்பற்றாக்குறை ஐ.அ.டொலர் 5,538 மில்லியனாக விளங்கி 2015 ஓகத்து இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறையினை விட ஐ.அ.டொலர் 89 மில்லியன் உயர்வாகக் காணப்பட்டது.

**வரைபடம் 1: ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம்**



**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**

2016 ஓகத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 186,288 ஆக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 11.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை பதிவுசெய்தன. இதன் விளைவாக, 2016இன் முதல் எட்டுமாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த சுற்றுலாப்பயணிகளின் வருகைகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் 1,172,465 உடன் ஒப்பிடுகையில் 1,359,906 இற்கு 16.0 சதவீதத்தினால் அதிகரித்தன. இந்தியா தொடர்ந்தும் சுற்றுலா வருகைகள் முக்கிய மூலமாக விளங்கியதுடன் அதனைத் தொடர்ந்து சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்சு என்பன விளங்கி இக்காலப்பகுதியின் மொத்த சுற்றுலாப்பயணிகளின் வருகையில் 52.0 சதவீதத்திற்கு வகைகூறின. இதன்படி 2016இன் முதல் எட்டுமாதகாலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான மொத்த வருவாய்கள்[1] 2015இன் இதேகாலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,943.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,253.9 மில்லியனாகக் காணப்பட்டது.

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**

2016 ஓகத்து காலப்பகுதியில் தொழிலாளர் பணவலுப்பல்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2015 ஓகத்தின் ஐ.அ.டொலர் 566.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 618.3 மில்லியனுக்கு 9.2 சதவீதம் கொண்ட ஆரோக்கியமான வீதத்தில் வளர்ச்சியடைந்தது. தொழிலாளர் பணவலுப்பல்களைக் கொண்ட வளர்ச்சி 2016 யூலையில் பெறுகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பிண்ணனியில் நோக்கப்பட வேண்டியதுடன் இதற்கு மத்தியகிழக்கு நாடுகளில் தற்பொழுது காணப்படும் பொருளாதார மந்தமும் தேர்ச்சியற்ற வகைகளின் கீழான புலம்பெயர்வு குறைவடைந்தமையுமே காரணமாகும். அதேவேளை, 2016இன் முதல் எட்டுமாதகாலப்பகுதியில் தொழிலாளர் பணவலுப்பல்களிலிருந்தான ஒன்றுசேர்ந்த உட்பாய்ச்சல்கள் 2015இன் தொடர்பான ஐ.அ.டொலர் 4,598.0 மிகையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4,804.1 மில்லியனுக்கு 4.5 சதவீதத்தினால் அதிகரித்தது.

**நிதியியல் பாய்ச்சல்கள்**

2016 ஓகத்தில் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 6.7 மில்லியன் கொண்ட மிதமான தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்த வேளையில், ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2016இன் முதல் எட்டுமாத காலப்பகுதியில் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 24.1 மில்லியனைக் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைக் காட்டின. கொழும்பு பங்குப்பரிவர்த்தனையிலிருந்தான சந்தை ஒன்றுசேர்ந்த வெளிப்பாய்ச்சல் இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான ஐ.அ.டொலர் 25.4 மில்லியனையும் முதலாந்தரச் சந்தையிலிருந்தான ஐ.அ.டொலர் 1.4 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சலையும் உள்ளடக்கியிருந்தன. 2016 ஓகத்து காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையும் வெளிநாட்டு முதலீடுகளின் நியதிகளில் தொடர்ந்தும் உட்பாய்ச்சலைப் பதிவுசெய்து ஐ.அ.டொலர் 99.1 மில்லியனாகக் காணப்பட்டது. எனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில் ஆண்டின் முதல் எட்டுமாத காலப்பகுதியில் அரசபிணையங்கள் சந்தைக்கான வெளிநாட்டு முதலீடுகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 633.9 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 34.2 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. 2016இன் முதல் எட்டுமாத காலப்பகுதியில்

---

[1] இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அதன் சராசரித் தங்கியிருக்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரிச் செலவு தொடர்பான 2016ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பற்றிய அளவீட்டினை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்படும்.

அரசிற்கான நீண்டகாலக்கடன்கள் 2015இல் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 219.1 மில்லியன்கொண்ட தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 526.4 மில்லியன்கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன.

**திரண்ட சென்மதி நிலுவை நிலைமை**

2016இன் முதல் ஏழு மாதகாலப்பகுதியில் திரண்ட சென்மதிநிலுவை 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,794.5 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 211.5 மில்லியன் கொண்ட மிகையொன்றினைப் பதிவுசெய்திருப்பதாக மதிப்பிடப்பட்டது.

**பன்னாட்டு ஒதுக்குகளும் செலாவணி வீத அசைவுகளும்**

இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2016 ஓகத்து இறுதியில் ஐ.அ.டொலர் 6.6 பில்லியனுக்கு அதிகரித்ததுடன் இது 4.2 மாத இறக்குமதிக்குச் சமமானதாகப் காணப்பட்ட வேளையில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 9.2 பில்லியனாக விளங்கி 5.9 மாத இறக்குமதிக்குச் சமமானதாகக் காணப்பட்டது.

2015 இறுதியிலிருந்து 2016 நவெம்பர் 28 வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலாருக்கெதிராக ரூபா 2.6 சதம் கொண்ட தேய்வினைப் பதிவுசெய்தது. குறுக்கு நாணய அசைவுகளை பிரதிபலிக்கும் விதத்தில் ரூபா, யூரோவிற்கெதிராக 0.3 சதவீதத்தினாலும் யப்பானிய யென்னுக்கெதிராக 9.8 சதவீதத்தினாலும் கனடிய டொலருக்கெதிராக 5.4 சதவீதத்தினாலும் அவுத்திரேலிய டொலருக்கெதிராக 4.9 சதவீதத்தினாலும் தேய்வடைந்த வேளையில் ஸ்டேலிங்பவுனுக்கெதிராக 15.4 சதவீதத்தினாலும் இந்திய ரூபாவிற்கெதிராக 0.2 சதவீதத்தினாலும் உயர்வடைந்தது.

## அட்டவணை 3: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | ஓகத்து 2015 ஐ.அ.டொ. மில் | ஓகத்து 2016 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - ஓகத்து 2015 ஐ.அ.டொ. மில் | சன - ஓகத்து 2016 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 798.9 | 866.3 | 8.4 | 7,155.4 | 6,865.2 | -4.1 |
| இறக்குமதிகள் | 1,523.4 | 1,649.1 | 8.3 | 12,604.0 | 12,402.9 | -1.6 |
| வர்த்தக மீதி (மிகை (+) குறை (-)) | -724.5 | -782.8 | 8.0 | -5,448.6 | -5,537.7 | 1.6 |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 276.1(ஆ) | 308.8 | 11.8 | 1,943.3(ஆ) | 2,253.9 | 16.0 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 566.0 | 618.3 | 9.2 | 4,598.0 | 4,804.1 | 4.5 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (இ) | -32.2 | 6.7 | 120.9 | 7.8 | -24.1 | -407.2 |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (ஈ) | 472.1 | 355.3 | -24.7 | 2,442.7 | 3,667.3 | 50.1 |
| இதில், | | | | | | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 372.1 | 127.1 | -65.8 | 1,003.4 | 1,036.5 | 3.3 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | - | 650.0 | 1,500.0 | 130.8 |
| கூட்டுக் கடன்கள் | - | - | - | - | 300.0 | - |
| நீண்ட காலக் கடன்கள் | 99.6 | 228.2 | 129.1 | 729.5 | 1,117.2 | 53.2 |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (உ) | - | - | - | 533.8 | 335.9 | -37.1 |

மூலங்கள்: இலங்கை முதலீட்டுச் சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

(அ) தற்காலிகமானது.

(ஆ) திருத்தப்பட்டது.

(இ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஈ) அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மூலதனம் மற்றும் நடைமுறை மாற்றல்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் விற்பனையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்தின் நீண்ட காலக் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் உள்ளடக்குகிறது.